பாம்பன் ஸ்வாமிகள் பாதமலர்கள் போற்றி

# சண்முக கவசம்

ஆன்மிகப் பல்சுவைத் திங்களிதழ்

ஜூலை 2013 ✿ விலை ரூ. 15/-



கரும்பேந்திய கந்தன், செட்டிகுளம்

# பிறவிப் பெருங்கடலைக் கடக்க உதவும் படகு

மனிதர்களாகப் பிறந்த நாம் வாழ்வில் பல்வேறு இன்பங்களிலும், மற்றும் துன்பங்களிலும் உழன்று, வாழ்க்கையை முடிக்கிறோம். நாம் வாழ்ந்த வாழ்க்கை முடிவுக்கு வரும், ஆனால் இந்த ஆன்மா எடுக்கும் பிறவியை நாம் முடிவுக்குக் கொண்டு வந்துவிட முடியுமா? அப்படி என்றால் நம்மால் பிறவி பெருங்கடலை கடக்க முடியுமா? நிச்சயம் முடியும். ஆனால் அதற்கு நாம் நம் உடலை வைத்துக் கொண்டுதான் பிறவிக் கடலைக் கடக்க முடியும். அதாவது உடலை படகு போல் பாவித்துக் கொள்ள வேண்டும். இந்த உடல் இயங்குவதற்கு நாம் பிராணவாயுவைப் பயன்படுத்துகிறோம். ஆனால் இந்த உடலில் இருக்கும் உயிர் அதாவது இந்த ஆன்மா இயங்குவதற்கு நாம் என்ன செய்கிறோம்? எதுவும் செய்யவில்லை என்ற பதில்தான் நமக்குத் தெரிகிறது. காரணம் நாம் இந்த உடலை மேவிய உயிரைக் காணமுடிவில்லை. நாம் காணமுடியவில்லை என்பதற்கு நம்முள் ஆன்மா இல்லை என்று கூறிவிட முடியுமா? இந்த உடலையும், ஆன்மாவையும் இயக்குவதற்கு நமக்கு அறிவு வேண்டும். இந்த அறிவுவைக் கொடுப்பது நம் தமிழ்க் கடவுளான முருகப் பெருமான்தான் என்பதை அருணகிரிநாதர் "யாம் ஓதிய கல்வியும் எம் அறிவும் தாமே பெற வேலவன் தந்தது" என்று நமக்கு உணர்த்துகிறார்.

ஆக கல்வி என்பது என்ன? நம் முன்னோர் வகுத்து வைத்துள்ள நல்ல நெறிகளையும், நல்ல பண்புகளையும் கற்றுக்கொண்டு, அதில் கூறப்பட்ட மகா மந்திரங்களைத் தெரிந்து கொண்டு, நாம் எப்படி பிராணவாயுவை உடலுக்கு பயன்படுத்தி இயக்குகிறோமோ அதுபோல மகா மந்திரச் சொற்களை நாம் நினைவில் எப்பொழுதும் சொல்லிக் கொண்டு இருக்க வேண்டும். அப்படியென்றால் மகா மந்திரங்கள் என்பது என்ன? இறைவனுடைய திருநாமத்தை நம் முன்னோர் பாடலாகவும், செய்யுளாகவும், நமக்குத் தந்து சென்றிருக்கின்றனர். அவற்றுள் சில "ஓம் நமசிவய", "ஓம் சரவணபவ" "ஓம் நமோ நாராயணா'' என்ற சில மந்திரங்களின் வழி நடந்து அவர்கள் இந்தப் பிறவிப் பெருங்கடலைக் கடப்பதற்கு இந்த உடலைப் படகாக வைத்துக் கொண்டு, லயம் என்கின்ற யோகாவின்படி நடக்க வேண்டும். இதில்



சைவத்தைச் சேர்ந்தவர்கள் ஓம் நமசிவய என்ற அல்லது ஓம் சரவணபவ என்ற மகா மந்திரத்தை நம் அறிவில் – அதாவது நினைவில் நிறுத்திக் கொண்டு இரவும் பகலும் இடைவிடாது சொன்னால் பிறவிக் கடலைக் கடக்க முடியும்.

**திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் எடுத்துரைத்த கருத்தினை பின்வருமாறு பார்க்கலாம்.**

அகில உலகங்களிலும் உள்ள எல்லாப் பொருள்களையும் மூன்று பிரிவில் அடக்கி விடலாம். ஒன்று தானே அறிகின்ற பொருள்; மற்றொன்று அறிவித்தால் அறிகின்ற பொருள். மூன்றாவது அறிவித்தாலும் அறியாத பொருள். இவற்றை பதி, பசு, பாசம் என்று சைவசமய ஞான நூல்கள் கூறுகின்றன.

பதி: தானே அறிகின்ற பொருள்.

பசு: அறிவித்தால் அறிகின்ற பொருள்.

பாசம்: அறிவித்தாலும் அறியமாட்டாத பொருள்.

இறைவனும் அநாதி. ஆன்மாக்களும் அநாதி. "பதியினைப் போல் பசு, பாசம் அநாதி" என்கிறார் திருமூலர். ஆனால் இறைவன் இன்ப வடிவினன்; ஆன்மாக்கள் ஆணவத்துடன் கூடித் துன்பத்தை நுகர்கின்றன. "சதாபாரதா துக்க பவான் தீனபந்தோ" என்று சுப்பிரமண்ய புஜங்கத்தில் சங்கரரும் கூறுகிறார். ஆன்மாக்களின் துன்பத்தை நீக்குவதற்குத் திருவுளங் கொண்ட இறைவன் அருள் திருமேனி தாங்கி, ஆன்மாக்களுக்கு உடம்பையும், கருவி கரணங்களையும் உலகங்களையும் படைத்துக் கொடுத்தருளினார். அவ்வாறு படைத்த எழுவகைப் பிறவிகளில் மனிதப் பிறப்பு உயர்ந்தது.

சிவத்தமிழ் குகமணி தெ.தனபால்
ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி ஆசிரியர்
Email : thiruppalli@yahoo.com Cell : 9444958526

அரிது அரிது மானிடராதல் அரிது என்கிறார் ஔவையார். மற்றும் எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் யாதினும் அரிதரிது காண் என்கிறார் தாயுமானவர். எண்ணில்லாத உலகங்களில் எண்ணில்லாத உடம்புகளை எடுத்து, எண்ணில்லாத காலமாகப் பிறந்து இறந்து மாறி மாறி வந்து இளைப்புற்றேன் என்கிறார் மணிவாசகர். ஏழு கடற்கரைகளின் மணல்களை எண்ணி அளவிட்டு இத்துணையென்று உறுதியிட்டுக் கூறினாலும் கூறிவிடலாம் ஆனால் நாம் பிறந்த பிறப்பை எண்ணி அளவிட முடியாது என்கிறார் அருணகிரிநாதர். ''எழுகடல் மணலை அளவிடி னதிகம் எனதிடர் பிறவி அவதாரம்'' – திருப்புகழ். ஒவ்வொரு பிறவியிலும் நாம் பருகிய தாய்ப்பால் அனைத்தும் சேர்ந்தால் பாற்கடல் சிறிதாகிவிடும் என்கிறார் குரு நமச்சிவாயர். அந்தப் பாடல் பின்வருமாறு:–

**"எடுத்தபிறப் பெல்லாம் எனக்குவந்த தாய்மார்
கொடுத்தமுலைப் பாலனைத்துங் கூட்டின் – அடுத்துவரும்
பன்னா கணைத்துயிலும் பாலாழி யுஞ்சிறிதாம்
மன்னா சிதம்பரதே வா". – சிதம்பர வெண்பா.**

இத்தகைய பிறவிகளில் மனிதப் பிறப்பு உயர்ந்தது என்றோம். மனிதன் என்ற சொல்லுக்கு நினைப்பவன் என்பது பொருள். மன் என்ற பகுதியடியாகப் பிறந்த சொல் மனிதன், நினைக்கின்ற கருவி மனம். அது இன்றியமையாத ஒன்று. மற்ற பிராணிகட்கு மனம் இல்லை. தமிழில் மனிதன்; வடமொழியில் மநுஜா, ஆங்கிலத்தில் மேன். இச்சொற்கள் யாவும் மன் என்ற பெயர்ச் சொல்லிலிருந்து தோன்றியவை. மனம் என்ற கருவியில்லாமையால் விலங்குகளின் வாழ்வு ஒன்றுபோல் அமைந்திருக்கிறது. மாடு அன்று உண்ட புல்லைத்தான் இன்றும் உண்ணுகிறது. மனிதன் உணவைப் பல்வேறு வகையாகப் பக்குவஞ்செய்து உண்ணுகிறான். குருவி அன்று கூடு கட்டியது போல்தான் இன்றும் கூடு கட்டுகிறது. மனிதன் வீடு கட்டும் முறை கணத்துக்குக் கணம் பல்வேறு விதமாக முன்னேற்றமடைந்திருக்கிறது. உணவினாலே, உடையினாலே, நடையினாலே, பேச்சாலே, எழுத்தாலே, வாகனங்களினாலே மனிதன் முன்னேற்றம் அடைகிறான். இதனை இப்படி செய்யவேண்டும் என்று சிந்திக்கிறான. இவ்வாறு சிந்திக்கிற மனிதன் சமயநெறியிலும் முன்னேற வேண்டும்.

நான் யார்? இந்த உடம்பு எப்படி வந்தது? உடம்பு தானே வந்ததா? ஒருவன் தந்து வந்ததா? தந்தவன் தன் பொருட்டுத் தந்தானா? அல்லது என்பொருட்டுத் தந்தானா? உடம்பு எடுக்கும் முன் எப்படி நான் இருந்தேன்? எதற்காக உடம்பு தரப்பட்டது? நான் எங்கிருந்து வந்தேன்? எதன் பொருட்டு வந்தேன்? நான் எங்கே போக வேண்டும்? நான் எங்கே போய்க் கொண்டிருக்கிறேன்? என்ற சிந்தனைகளைச் சிந்திக்க வேண்டும். இந்தச் சிந்தனைகள் தாம் சிந்திக்கத் தக்கவை. இவற்றைச் சிந்திக்கின்றவன் உண்மையில் மனிதனாகிறான். இந்தச் சிந்தனையில்லாதவர்களைச் சிந்தித்து ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் பரமகுருநாதராகிய அருணகிரிநாதர் பாடுகிறார்.

**சிந்திக்கிலேன் நின்று சேவிக்கிலேன் தண்டைச் சிற்றடியை
வந்திக்கிலேன் ஒன்றும் வாழ்த்துகிலேன் –மயில்வாகனனைச்
சந்திக்கிலேன் பொய்யை நிந்திக்கிலேன் உண்மை சாதிக்கிலேன்
புந்திக்கிலேசமும் காயக்கிலேசமும் போக்குதற்கே.**

ஏனைய சிந்தனைகள் பிறவியைத் தரும். அச்சிந்தனைகள் அற ஐந்தெழுத்தைச் சிந்திக்க வேண்டும். பஞ்சாக்கரத்தில் பல பிரிவுகள் உண்டு. "ஐம்பத்தொன்றிலெட்டாறில் மூன்றினில் ஐந்தில் தங்கும் அப்பாலை வான் பொருள்" என்பது திருவகுப்பு. மூன்று என்பது திரியட்சரம். இதைப் பரம ஞானிகள் ஓதுவார்கள். "சிவாய எனும் நாமம் ஒரு காலும் நினையாத திமிராகரனை வாவென் றழையாதே" –திருப்புகழ்.

**"ஆவியீ ரைந்தை அபரத்தே வைத்தோதில்
ஆவியீ ரைந்தை அகற்றலாம் – ஆவியீர்
ஐந்தறலாம் ஆவியீர் ஐந்துறலாம் ஆவியீர்
ஐந்திடலாம் ஓரிரண்டோ டாய்ந்து" – திருவருட்பா**

ஐந்தெழுத்து என்பது "நமசிவய" ஆகும். இதில் உள்ள ஒவ்வோர் எழுத்துக்கும் ஒவ்வொரு பொருள் உண்டு. அவை பின்வருமாறு:– ந–திரோத மலம்; ம–ஆணவ மலம்; சி–சிவம்; வ–திருவருள்; ய–ஆன்மா. ஆன்ம எழுத்து ய, ஈரைந்து பத்து. தமிழ் எழுக்கில் பத்து என்பதை "ய" என்று எழுதப்படுகிறது. இந்த யகரத்தை அபரம் – பின் சிகரத்துக்கும் வகரத்துக்கும் பின் வைத்து சிவய என்று ஓதுவார்களானால் **"ஆவியீ ரைந்தை அகற்றலாம்"** ஈரைந்து – பத்து; பத்து என்ற சொல்லை "ஆ" "வி" என்ற எழுத்துகளுடன் சேர்க்க வேண்டும். "ஆ" என்ற எழுத்துடன் "பத்து" என்ற சொல்லைச் சேர்க்க (ஆ+பத்து) ஆபத்து. "வி" என்ற எழுத்துடன் "பத்து" என்ற சொல்லைச் சேர்க்க (வி+பத்து) விபத்து. இந்தப் பகுதி நேயர்களுக்குப் புரிவது சற்று சிரமம்தான். இதை, புரியும்படி கூறவேண்டுமென்றால் ஆபத்து உடலுக்கு வரும் துயர், விபத்து உயிருக்கு வரும் துயர். உடலுக்கு வரும் துயர்கள் பசி, பிணி முதலியன. உயிருக்கு வரும் துயர்கள் பிறப்பு, இறப்பு என்பன. இந்த ஆபத்து விபத்து என்ற இருவகைத் துயரங்களும் சிவய என்று ஓதுவார்க்கு உண்டாகமாட்டா. **"ஆவியீ ரைந்தை அகற்றலாம்"** (ஆவியீர் ஐந்து அறலாம்) ஐந்து வகையான மலங்கள் என்பன பின்வருமாறு ஆணவம், கன்மம் மாயை, திரோதம், மாயேயம் என்ற பஞ்ச மலங்கள் ஆகும். **"ஆவியீர் ஐந்துறலாம்"** (ஆவியீர் ஐந்து உறலாம்) ஆவியீர் – விளி, உயிர் போன்றவர்களே! நிவிர்த்திகலை, பிரதிஷ்டாகலை, வித்யாகலை, சாந்திகலை, சாந்தியதீதகலை என்ற பஞ்சகலாமயமும் உண்டாகும். **ஆவியீர் ஐந்திடலாம் ஓரிரண்டோடாய்ந்து:–** ஆவி– பிராணவாயு ஈரைந்தோடு ஓரிரண்டு ஆய்ந்து இடலாம் – வெளியே அவமே கழிகின்ற பன்னிரு அங்குலம் பிராணவாயு அவ்வாறு கழியாது உள்ளே மீளும். மேலே கூறப்பட்ட திருவருட்பா என்ன அற்புதமான செய்யுள்! எத்துணை ஆழமான செம்பொருள்கள்! ஆதலால் ஐந்தெழுத்தைச் சிந்திப்போமானால் துயர்கள் அகலும்.

தனியிழையை எளிதில் அறுத்து விடலாம். இருபத்தையாயிரம் இழைகளைக்கூட்டி முறுக்கி விட்டால், அக்கயிற்றால் தேரையிழுத்து விடலாம். அதுபோல் பல லட்சம் முறை மந்திர ஜெபம் கூடுமானால் இறைவனைத் தரிசித்து விடலாம்.

96கோடி இராம மந்திர ஜெபத்தால் தியாகராஜ சுவாமிகள் ஸ்ரீராமரை நேரில் தரிசித்தார். அண்மையில் வாழ்ந்த உண்மைத் துறவியாகிய அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் தன்னுடைய 13 வயதில் சிவ சிவ மந்திரத்தை உச்சரித்ததால் "கங்கையைச் சடையிற் பரித்துமறி மழுவங் கரத்திற்றரித்து" என்ற அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தப் பாடலை நமக்குத் தந்துள்ளார். மேலும் சுவாமிகள் 36நாள் பிரப்பன் வலசையில் மயானத்தில் குழி வெட்டிக் கொண்டு, அக்குழியிலிருந்து இடையறாது சடக்கர மந்திரத்தைச் (ஓம் சரவணபவ) செபித்து இளம்பூரணனை நேரில் கண்டு தரிசிக்கப் பெற்றார். இளம்பூரணனாகிய பழநி முருகன், சுவாமிகளுக்கு ஒரு சொல் ஓத அதை சுவாமிகள் அருளிய

தகராலய ரகசியம் என்ற படைப்பில் நமக்கு அந்த மந்திரச் சொல்லைக் கூறியுள்ளார்கள். ஆனால் இதுநாள் வரை அந்த மந்திரச் சொல்லை விளக்கிக் கூறுபவர்கள் யாரும் இல்லை என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இடையறாது கடைந்தால் பாலிலிருந்து வெண்ணெய் வெளிப்படுவது போல், இடையறாது தியானஞ் செய்தால் எம்பெருமான் வெளிப்படுவான். இதனை அப்பர் பெருமான் விளக்குவதை இங்கு காண்போம்.

**விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்**
**மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்**
**உறவுக் கோல்நட் டுணர்வுக் கயிற்றினால்**
**முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே.**

உடம்பை உயிர் செலுத்துகிறது. உயிரை இறைவன் செலுத்துகிறான். (காரை டிரைவர் செலுத்துகிறான். டிரைவரை எஜமானன் செலுத்துகிறான் என்பது போல் உணர்க). உடம்புக்குள் உயிர்; உயிருக்குள் இறை; (டயருக்குள் ட்யூப், ட்யூபுக்குள் காற்று). இறைவனுடைய உதவிகளை நாம் ஆழமாக எண்ணினால் உள்ளம் உருகும்; அன்பினால் என்பும் உருகும், பிறகு முடிவில் உயிர் உருகும், உயிர் உருகினால் உயிரில் உள்ள சிவம் உயிருடன் ஒன்றிவிடும். அரக்கின் இடையில் தங்கம்; தங்கத்தின் இடையில் ரத்தினமணி. அரக்கு உருகினால் தங்கம் உருகும்; தங்கம் உருகினால் மணி அதில் பதிந்துவிடும். அதுபோல் உள்ளம் உருகி, உயிர் உருகி சிவத்துடன் ஒன்றுபட வேண்டும். நம் உள்ளமே உருகவில்லையானால் உயிர் எவ்வாறு உருகும்?

**இறையுடன் எவ்வாறு ஒன்றுபட முடியும்?**

ஆதலால், அன்பைப் பெருக்கி உள்ளத்தையும் உணர்வையும் உயிரையும் உருக்கி, இறையுடன் கலந்து இன்புறுவதுவே சைவ சித்தாந்தத்தின் முடிவாகும். உணவு தேடுகின்ற நாம் உணர்வும் தேடவேண்டும். நித்த அநித்த வேறுபாடுகளை உணர்வதுதான் உணர்வுடைமைக்கு அழகாகும். மகாபாரதத்தில் யட்சப் பிரச்னம் என்று ஒன்று உள்ளது. அதுமிகமிக அருமையானது. யட்சமூர்த்தி, தருமரைப் பார்த்துக் கேட்டார். "தருமா! உலகிலே மிகவும் ஆச்சர்யமானது எது"? அதற்கு தருமர் "மரணம் வருமுன் இறைவன் சரணத்தை வழிபட்டு நலம் பெற வேண்டும்" என்றார். ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருளிய ஞானவாக்கியத்தில் "இரையுடன் இறையையும் தேடு" என்று கூறியிருப்பதை நாம் இங்கே நினைவுபடுத்திக் கொள்ளலாம். ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் மானசீக குருவான அருணகிரிநாதர் ''இடுகாட்டில் என்னை எரியூட்டும் முன்னர் இருதாள்கள் தம்மை உணர்வேனோ" என்று வருணிக்கிறார்.

**இக்கட்டுரையின் முக்கிய நோக்கம் என்ன?**

ஐந்தெழுத்து மந்திரத்தை அல்லது சடக்கர மந்திரத்தை இடைவிடாது ஜெபித்தால் நாம் மரணமிலாப் பெருவாழ்வு வாழ முடியும். என்குருநாதர் ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் முருகனின் சடக்கர மந்திரத்தை உச்சரித்ததாலும், முருகப் பெருமானின் பெருங்கருணையைப் பெற்றதாலும் மரணமில்லாப் பெருவாழ்வு பெற்று, சென்னை, திருவான்மியூரில் ஜீவசமாதி கொண்டு நமக்கு அருள்பாலிக்கிறார். இவருடைய நிலையை நாம் பெறுவது மிகவும் கடினம்தான். இருந்தாலும், குருவின் ஆசியுடன் முருகனின் அருள் பெறலாம். பிறவிப் பெருங்கடலைக் கடப்பதற்கு படகு என்ற இந்த உடம்பில், துடுப்பு என்ற மந்திரம் நினைவில் நின்றால் நாமும் பிறவிப் பெருங்கடலைக் கடக்க முடியும் என்பது முடிவான ஆழ்ந்த கருத்தாகும்.



## ஆன்மிகப் பாதையில் செல்லும் சண்முக கவசம் படிக்கும் நேயர்களுக்கு ஒரு புதிய நற்செய்தி

**சண்முக கவசம் இதழில் வரும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் செய்திகள் தாங்கள் எப்போது வேண்டுமானாலும் படித்துக் கொள்ள இன்றைய விஞ்ஞானத் துறையில் மிகப் பெரிய வசதியை நாம் பெற்றுள்ளதால் இனிமேல் தாங்கள் கீழ்வரும் இணைய தளத்தில் படித்துத் தெரிந்துகொள்ள நமது குழுக்களில் உள்ள ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி மன்றம் இதைச் செய்ய முன் வந்துள்ளது என்பதை நாங்கள் தங்களுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அந்த இணைய தளத்தின் பெயர் பின்வருமாறு :**

**www.pambanswamigal.net or www.pambanswamigal.org**

**மேலும் விவரங்களுக்கு : Email: thiruppalli@yahoo.com or 94449 58526**